# 2.1 பாவத்தின் சம்பளம்

**வேத வசனம்:** பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23

**அறிக்கை:** எல்லோரும் பாவம் செய்துவிட்டனர். பாவத்தின் சம்பளம் மரணம்

**சத்தியம்:** எல்லா மக்களும் பாவம் செய்து விட்டனர். எனினும் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து பாவமற்றவரானபடியால் மனிதராகிய நாம் பெறவேண்டிய தண்டனைகளை அவர் ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்தார்.

## பாடக்குறிப்புகள்

* **பாவ வாழ்க்கை.** *2 தீமோ. 3:2-4*
* **பாவத்தின் விளைவு.** ரோமர் *6:23*
* **மனிதரால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது.** ரோமர் *3:10-11, 7:18-19*
* **இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம்** - எபே *1:7*

## வேதப்பகுதி

*ஆதியாகமம் 6:5-8*

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- பாவத்தின் வரையறை என்ன? ஏசாயா 53:6
- இயேசு கிறிஸ்து நமக்கானத் தண்டனையை அனுபவித்தபின்னரும் அவரிடம் நம்முடைய பாவங்களை ஏன் அறிக்கையிட வேண்டும்?
- கடைசி நாட்களில் காணப்படும் பாவ செயல்களைக் குறித்து 2. தீமோ.3:2 ல் என்ன வாசிக்கிறோம்?

**அழுக்குத் தண்ணீர்:** ஒரு குவளையில் இருக்கும் தண்ணீரில் ஒரு சிறு துளி அழுக்கு கலந்து விட்டது. அது போல மனிதனிடத்திலும் பாவம் சேர்ந்துவிட்டதால் பாவ மனிதனாக மாறிவிட்டான். தேவன் எந்த ஒரு பாவத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டார். இயேசுவோ எல்லாருடைய பாவத்துக்காகவும் சிலுவையில் மரித்தார். இது ஒரு நற்செய்தி ஆகும். சிந்தப்பட்ட அவருடைய இரத்தம் நமக்கு தேவனிடமிருந்து பாவ மன்னிப்பை பெற்றுத் தருகிறது. அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படி இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது என்று வேதம் குறிப்பிடுகிறது.

**செயல்**

**நாம் பிறருக்கு கொடுக்கும்போது அது தேவனை கனப்படுத்துகிறது. தேவையில் உள்ள ஒருவருக்கு எப்படிக் கொடுக்கலாம் என்று யோசித்துப்பார்.**

**சிந்திக்க:**

*ஏன் நம்முடைய நற்கிரியைகள் மூலம் நாம் இரட்சிக்கப்பட முடியாது?*

______________________________

**ஜெபம்:**

*தேவன் கொடுத்த முழுமையான இரட்சிப்பு என்னும் பரிசுக்காக நன்றி சொல்லும் ஜெபத்தைக் கீழே உள்ள இடத்தில் எழுதவும்.*

______________________________

______________________________